இலங்கையில் மன்னார் மாவட்ட இடப்பெயர்களில் மூலிகைத்தாவரங்களின் செல்வாக்கு – ஓர் ஆய்வு

மருத்துவர் சே. சிவசண்முகராஜா, எம்.டி (சித்தா).,
முதுநிலை விரிவுரையாளர், சித்தமருத்துவத் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கைதடி

மலர்: 3
இதழ்: 4
மாதம்: ஏப்ரல்
வருடம்: 2019
ISSN: 2454-3993

ஆய்வுச்சுருக்கம்

இடப் பெயர்களுக்கான காரணங்கள் பலவாக இருந்தபோதிலும் தாவரப் பெயர்களைக்கொண்ட இடப் பெயர்கள் கணிசமான அளவில் இருப்பதை அறிஞர்கள் பலரும் எடுத்துக் காட்டியுள்ளனர். “ஓரிடத்தில் காணப்படுகின்ற தாவரங்களின் மிகுதி கருதியும், சிறப்புக் கருதியும் தாவர இடப் பெயர்கள் ஏற்பட்டிருக்கலாம்” என்று கு.பகவதி குறிப்பிட்டுள்ளார் (பகவதி பக்12). தாவர இடப் பெயர்களைப் பற்றி அறிந்துகொள்வதன் மூலம் அப்பிரதேசத்தின் தாவர மூலிகைகளின் செறிவு, அவற்றின் வாழிடச் சூழல், அவற்றைப் பயன்படுத்தும் மக்களின் வாழ்வியல் போன்ற தகவல்களையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும். அந்தவகையில் இலங்கையின் வடமாகாணத்தில் அமைந்துள்ள மன்னார் மாவட்டத்திலுள்ள இடப் பெயர்களில் மூலிகைத் தாவரங்களுடன் தொடர்பாக அமைந்துள்ள இடப்பெயர்களைப் பற்றி ஆராய்ந்து, ஆவணப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.அதன் மூலம் மன்னார் மாவட்டத்தின் மூலிகை வளத்தையும் நாம் அறிந்து கொள்ள முடியும்.

திறவுச்சொற்கள்: மூலிகை, தாவரஇடப்பெயர், மன்னார், இலங்கை, ஆவணப்படுத்தல்

அறிமுகம்

ஓர் இனத்தின் பாரம்பரிய வாழிடப்பிரதேசங்களை – குடிப்பரம்பரை அடையாளப்படுத்துவதில் இடப்பெயர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. வரலாற்றுச் சான்றுகள் அதிகம் இல்லாதவிடத்து இடப்பெயர்கள் சான்றாக அமைவதை,“வரலாறு மௌனமாகும்போது இடப்பெயர்கள் பேசக்கூடும்” என்று எல்.வி. இராமசுவாமி ஐயர் எடுத்துக் கூறியுள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. (கதிர் தணிகாசலம் 1992). ஆயினும் இலங்கையில் குறிப்பாகத் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள இடப்பெயர்களை ஆராய்ந்து, ஆவணப்படுத்தும் பணி அதிகம் முக்கியத்துவம் பெறவில்லை என்றே கூறவேண்டியுள்ளது. சுவாமி ஞானப்பிரகாசர் (2003), குமாரசுவாமி (1918), கே. குலரத்தினம் (4), இ. பாலசுந்தரம் (2002), கதிர் தணிகாசலம் (1992) போன்ற சில அறிஞர்களே இத்துறையில் தமது பங்களிப்பை நல்கியுள்ளனர். ஆயினும் இடப்பெயர்கள் பல்துறை சார்ந்தனவாக அமைந்துள்ளதால் (பகவதி: 15) அவ்வத்துறை சார்ந்தோர் இடப்பெயராய்வில் ஈடுபடும்போது

விரிவான பல தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை மறுக்க முடியாது. அந்தவகையில் மூலிகை மருத்துவமான சித்தமருத்துவம் சார்ந்த இக்கட்டுரையாசிரியர், இத்துறையில் தனது பங்களிப்பை வழங்க முன்வந்துள்ளார்.

ஆய்வின் நோக்கம்

இலங்கை மன்னார் மாவட்டத்திலுள்ள இடப்பெயர்களில் மூலிகைத் தாவரங்களின் செல்வாக்கை அறிந்து ஆவணப்படுத்ததல்

ஆய்வுமுறையியல்

இவ்வாய்வானது களம், இலக்கியம் சார்ந்ததாக அமைகிறது. இந்த ஆய்வுக்குரிய தகவல்கள் மன்னார் மாவட்ட செயலகபுள்ளிவிபரம் - 2009 (Source -District Secretariat Mannar), நூல்கள், வெளியீடுகள், களஆய்வு, மற்றும் தகவலாளர்களிடமிருந்து பெறப்பட்டவையாகும்.

ஆய்வுப்பிரதேசம்

மன்னார் மாவட்டமானது இலங்கையின் வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களில் ஒன்றாகும். இம்மாவட்டமானது இலங்கையின் வடமேற்குத் திசையில் அமைந்துள்ளது. அதன் வடக்கு எல்லையாகக் கிளிநொச்சி மாவட்டமும், வடகிழக்கு எல்லையாக முல்லைத்தீவு மாவட்டமும், கிழக்கு எல்லையாக வவுனியா மாவட்டமும். தென்கிழக்கு எல்லையாக அனுராதபுர மாவட்டமும், தெற்கு எல்லையாகப் புத்தளம் மாவட்டமும், மேற்கு எல்லையாக மன்னார்க் குடாக் கடலும் அமைந்துள்ளன.இம்மாவட்டத்தின் தலைநகராக மன்னார் நகரம் விளங்குகிறது. இம்மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 2002.07 சதுர கிலோமீற்றராகும்.

மன்னார் மாவட்டமானது ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளாகவும், 153 கிராமசேவகர் பிரிவுகளாகவும் பிரிக்கப் பட்டுள்ளதுடன், 587 கிராமங்களையும் கொண்டுள்ளது. (அட்டவணை-1)

அட்டவணை – 1

பிரதேச செயலர் பிரிவு	கிராமசேவகர் பிரிவுகளின் எண்ணிகை	கிராமங்களின் எண்ணிக்கை
மன்னார் நகரம்	49	133
நானாட்டான்	31	156
மடு	17	76
முசலி	20	101
மாந்தை மேற்கு	36	121
மொத்தம்	153	587

இம்மாவட்டத்தின் மேற்குப்புறமாக மன்னார்க் குடாக்கடல் அமைந்துள்ளதால் அதனை அடுத்துள்ள கரையோரப்பிரதேசங்கள் நெய்தல் நிலத்துக்குரியனவாகவும், ஏனைய பகுதிகள் வரள்நிலம், உலர்வலயக்காடுகள் என்பவற்றைக் கொண்டும் விளங்குகின்றன. ஆயினும் மிகவும் புராதன காலந் தொட்டு மன்னாரும் ஆங்கு அமைந்துள்ள மாந்தை அல்லது மாதோட்டமும் மிகவும் செழிப்பான நகரமாக விளங்கியதாக வரலாற்றுச் செய்திகள் எடுத்துக் கூறுகின்றன.

இம்மாவட்டத்திலுள்ள தள்ளாடி என்னும் இடம் இராம,இராவண யுத்தத்தின்போது ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையை எடுத்து வரும்போது அதன் பாரத்தால் இவ்விடத்தில் சற்று தள்ளாடியதன் காரணமாக ஏற்பட்ட காரணப் பெயராகக் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. அவ்விதம் அனுமன் தள்ளாடியபோது சஞ்சீவி மலையிலிருந்து சில மூலிகைகள் இவ்விடங்களில் விழுந்து முளைத்தன என்பர். இவ்விடத்திலும், மன்னார் மாவட்டத்தின் பிறபாகங்களிலும் காணப்படும் அபூர்வ மருத்துவ மூலிகைகளை வைத்து அவ்விதம் ஒரு கதை உருவாக்கப்பட்டிருக்கலாம். அல்லது உண்மைச் சம்பவமாகவும் இருக்கலாம். தற்காலத்திலும் இயற்கை மருத்துவ மூலிகைகள் மிகுந்த இடமாக இம்மாவட்டம் விளங்குவது குறிப்பிடத்தக்கது. அதன் காரணமாகவே இம்மாவட்டத்தின் பல ஊர்கள் மூலிகைத் தாவரப் பெயர்களால் அழைக்கப்படுகின்றன போல் எண்ணத் தோன்றுகிறது.

ஆய்வு தொடர்பான விவாதங்களும் எடுத்துரைப்புகளும்

மன்னார் மாவட்டத்திலுள்ள 587 ஊர்களில் 192 ஊர்ப்பெயர்கள் தாவர மூலிகைகளின் பெயர்களுடன் தொடர்பானவையாகக் காணப்படுகின்றன. அவற்றின் விபரம் அட்டவணை – 11 இல் தரப்பட்டுள்ளது. (சில இடப்பெயர்கள் இரட்டைத் தாவரப் பெயர்களைக் கொண்டிருப்பதையும் கவனத்திற் கொள்க)

அட்டவணை - 11

மூலிகை வகை	ஊர்களின் எண்ணிக்கை
மரங்கள்	130
கொடிகள்	18
செடிகள்	40
புற்கள்	04
மொத்தம்	192

இவ்வாய்வில் கண்டறியப்பட்ட 192 தாவர இடப்பெயர்களும் தமிழிலக்கியரீதியாகவும், தமிழ் மருத்துவரீதியாகவும் விரிவாக எடுத்துரைக்கப்படத்தக்கன. ஆயினும் கட்டுரையின் விரிவஞ்சி சுருக்கமாக இங்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளன. இடப்பெயர்கள் காணப்படும் பிரதேச செயலர் பிரிவுகளும் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் எமது பிரதேச மூலிகைத் தாவரங்கள் எமது பிரதேச வைத்தியர்களால் பண்டைக் காலந்தொட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதை ஆவணப்படுத்தும் மற்றொரு நடவடிக்கையாக, ஈழத்துச் சித்த மருத்துவநூலான பரராசசேகரத்தில் கூறப்பட்டுள்ள, இவ்விடப்பெயர்கள் சுட்டி நிற்கும் மூலிகைகள் சேர்த்துச் செய்யப்படும் மருந்துப் பெயர்களும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்திலுள்ள மரப்பெயர்களால் அழைக்கப்படும் இடப்பெயர்கள்

மன்னார் நகர பிரதேசசெயலர் பிரிவில் அமைந்துள்ள தபசி ஆலங்குளம், ஞானி ஆலங்குளம், என்னும் ஊர்களும், நானாட்டான் பிரதேசசெயலர் பிரிவில் உள்ள பெரிய ஆலங்குளம் என்னும் ஊரும், முசலி பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள ஆலங்குளம் முதிரைப்பரி ஆலங்குளம், என்னும் ஊர்களும் மாந்தை பிரதேச செயலர் அமைந்துள்ள ஆலங்குளம் என்னும் ஊரும் ஆலமரம் காரணமாக ஏற்பட்டவையாக உள்ளன. இவற்றுள் முதிரைப்பரி ஆலங்குளம் என்பது முதிரைமரம், ஆலமரம் ஆகிய இருமரப்பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுகிறது. ஆலடிக்கட்டைக்காடு என்னும் இடமும் மன்னார் நகரத்திலுள்ளது. ஆத்திக்குழி (நானாட்டான்), பெரிய ஆத்திமோட்டை (நானாட்டான்), சின்னஆத்திமோட்டை (நானாட்டான்), ஆத்திமோட்டை (மாந்தை மேற்கு) ஆகிய இடப் பெயர்கள்

ஆத்திமரங் காரணமாக ஏற்பட்டவையாகும். ஆத்தி என்பது திருவாத்தியைக் குறிக்கும். (வை.மூ.அ: பக்.32) - அவ்விதமே சின்ன அத்திக்குழி (நானாட்டான்), அத்திக்குழி (முசலி) என்பன அத்திமரம் காரணமாகவும், அகத்திமுறிப்பு (முசலி), அகத்திமுறிப்புத்தோட்டம் (முசலி), அகத்திக்குளம் (நானாட்டான்), அகத்தி முறிப்பு (மடு), அகத்திக்குளம் (மாந்தை) என்பன அகத்திகாரணமாகவும், சின்ன அரசங்குளம் (மடு) அரசமரங்காரணமாவும், ஏற்பட்ட இடப்பெயர்களாகும்.

கடற்கரையை அடுத்து உவர்நீர்ப்பிரதேசங்களில் வளரும் தாவரங்கள் கண்டல்தாவரங்கள் எனப் பொதுவில் அழைக்கப்படும். கண்டல் என்பது ஒரு மரம், தாழை, நீர்முள்ளி (த. மொ.அ. 2016: 375) அந்தவகையில் நெடுங்கண்டல் (மாந்தை), முள்ளிகண்டல் (மாந்தை), பூவரசன் கண்டல் (நானாட்டான்), அல்லிகண்டல் (மன்னார் நகரம்), வாழ்க்கைப்பட்டான் கண்டல் (நானாட்டான்), சிறுகண்டல் (நாநாட்டான்), பொன்தீவு கண்டல் (நானாட்டான்), பரிகாரிகண்டல் (நானாட்டான்), காத்தன் கண்டல் (முசலி),கண்டல் (முசலி), கருங்கண்டல் (மாந்தை), கருங்கண்டல் வண்ணாகுளம் (மாந்தை), வட்டக்கண்டல் (மாந்தை), வாழ்க்கை பெற்றான் கண்டல் மேற்புளியங்குளம் (நானாட்டான்), இத்திகண்டல் (மாந்தை), கண்டல் (மாந்தை), புத்திர கண்டல் (நானாட்டான்), பரப்பன் கண்டல் பெரியகுளம் (மன்னார் நகரம்), பரப்பாங் கண்டல் சிறுகுளம் (மன்னார் நகரம்) ஆகிய இடப் பெயர்கள் கண்டல் காரணமாக ஏற்பட்டவையாகும். மன்னார் மாவட்டம் கடற்கரையை அண்டியுள்ள பிரதேசமாக இருப்பதால் கண்டல் தாவரங்கள் இயற்கையாகவே இப்பிரதேசத்தின் பல இடங்களிலும் காணப்படுகின்றன. மருத்துவப் பயன்பாட்டுடன் கடற்கரை மண்ணரிப்பைத் தடுக்கும் இயற்கைத் தாவரங்களாகவும் இவை விளங்குகின்றன. கண்டலில் வெண்கண்டல, கருங்கண்டல், பேய்க்கண்டல் என்று பல பேதங்களுண்டு என்பதும் குறிப்பிடத் தக்கது. முள்ளிகண்டல் என்பது, முள்ளி – கண்டல் - முள்ளிச்செடியையும் கண்டலையும், பூவரசன் கண்டல் என்பது, பூவரசு – கண்டலையும், அல்லிகண்டல் என்பது, அல்லி – கண்டல் என்பவற்றையும், வாழ்க்கைப்பெற்றான் கண்டல் மேற்புளியங்குளம் என்பது, கண்டல் - புளியமரம் என்பவற்றையும், இத்திகண்டல் என்பது, இத்தி – கண்டல் ஆகிய மரங்களையும் குறிக்கின்றன. அதாவது இரட்டைத்தாவரப் பெயர்களைக் கொண்டவையாக இவை அமைந்துள்ளன.

கொண்டைச்சிக்குடா (முசலி), இலந்தைக்குளம் (நானாட்டான்), சின்ன இலந்தைமோட்டை (நானாட்டான்), இலந்தை மோட்டை (நானாட்டான்), இலந்தைக்குளம் (நானாட்டான்), இலந்தைக்குளம் (முசலி), இலந்தைமோட்டைக்குளம் (முசலி), இலந்தைக்குளம் (முசலி), இலந்தைமோட்டைவேலி (முசலி), இலந்தைவான் (மாந்தை), இலந்தைக்கொடை (முசலி), கொண்டைச்சி (முசலி) என்னும் இடப் பெயர்கள் இலந்தை மரங்காரணமாக ஏற்பட்டவையாகும். கொண்டைச்சி என்பது இலந்தையைக் குறிக்கும். (ம.பெ.அ. பக்.325) கோண்டை என்பதும் இலந்தை. (ம.பெ.அ.பக்331,) எனவே, கோண்டைச்சி என்பது கொண்டைச்சியாகத் திரிபடைந்திருத்தல் கூடும் என்று கருதலும் தகும். மடு பிரதேசத்தில் உள்ள தம்பனைக் குளம் என்பதும் இலந்தை காரணமாக ஏற்பட்ட ஓரிடமாக இருத்தல் வேண்டும். தம்பலம் என்பதும் இலந்தையாகும். (ம.பெ.அ.388) இலங்கையின் பல பாகங்களிலும் இலந்தை மரங்கள் பரவலாகக் காணப்படுவதை நோக்குமிடத்து இலந்தை காரணமாக இலங்கை என்ற பெயர் ஏற்பட்டிருப்பதற்கும் வாய்ப்புண்டு.

இலவகுளம் (மாந்தை), இலகடிப்பிட்டி (இலவடிப்பிட்டி) (நானாட்டான்) என்பன இலவமரங்காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்களாகும். இலவ மரத்தில் சாதாரண இலவு, முள்ளிலவு என்ற பேதங்களுண்டு. முள்ளிலவம்பட்டைநெய் வாதநோய்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. (ப.சே.வா.நி.:47,ப.சே.மே.நி:..57, 65). இலுப்பைக்குளம் (மன்னார் நகரம்), இலுப்பைக்கடவை (மாந்தை), இரணை இலுப்பைக்குளம்

(மடு), பண்டார இலுப்பைக்குளம் (மடு), அம்பட்ட இலுப்பைக்குளம் (மடு) என்பன இலுப்பை மரங்காரணமாக ஏற்பட்ட இடப் பெயர்களாகும். இலுப்பைக்கடவை முற்காலத்தில் இலுப்பைத் தோப்பாக இருந்ததாக அங்கு வசிக்கும் மூதாட்டி ஒருவர் கூறினார். எனவே, இலுப்பைத்தோப்பைக் கடந்து அப்பால் செல்ல வேண்டியிருந்ததால் அவ்விடத்திற்கு இலுப்பைக்கடவை என்று பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

இத்திக்குளம் (முசலி), இத்திகண்டல் (மாந்தை), என்பன இத்திகாரணமாகவும், (இத்திகண்டல் - கண்டல் பற்றிய குறிப்பையும் பார்க்கவும்.), காயாநகர் (மாந்தை) என்பது காயாமரங்காரணமாகவும் ஏற்பட்ட இடப்பெயராக இருத்தல் வேண்டும். காயாமரத்தின் வேறு பெயர்களாக காசா, பூவு, வெங்காலி என்பன குறிப்பிடப்படுகின்றன. (குகதாசன்: 2004: 168, பி.எஸ். மணி: 1989: 178) “காசை பூவை காயாவாகும்” என்கிறது சேந்தன்றிவாகரம் (பக்61) காயாமரமானது கடற்கரையோரங்களிலும், உலர்வலயத்திலும் வளரும் ஒரு மரமாகும். (குகதாசன்:2004: 168).

கறுக்காமுறிப்பு (நானாட்டான்), கறுக்காக்குளம் (மாந்தை) என்பன கொன்றை அல்லது கடுக்காய் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்களாகும். கறுக்காய் என்பது கடுக்காயைக் குறிக்கும் (ம.பெ.அ.பக்.276).

கருங்காலித்தாழ்வு (முசலி), கருங்காலி மோட்டை (முசலி), கருங்காலி மோட்டை (மாந்தை), என்னும் இடப்பெயர்கள் கருங்காலிமரங்காரணமாக ஏற்பட்டிருத்தல் வேண்டும். கருங்காலி மரமானது உலர்வலயக் காடுகளில் பெருமளவில் வளரக்கூடியது. இம்மரங்கள் முற்காலத்தில் இலங்கையிலும் தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் அடர்ந்து வளர்ந்திருந்ததாகக் கூறப்படுகிறது. (பி.எஸ்.மணி 1989 40). யாழ்ப்பாண மாவட்டத்திலும் சில இடங்கள் தற்போதும் கருங்காலி (காரைநகரில் உள்ளது) என்று அழைக்கப்படுகின்றன. ஆயினும் தற்காலத்தில் கருங்காலி மரங்கள் அருகிக் கொண்டு வருகின்றன. கருங்காலித்தைலம் சிரரோகத்திற்குப் பயன்படுத்தப்பவது குறிப்பிடத்தக்கது (ப.சே..சிர. நி.61, 90)

கூழாங்குளம் (முசலி) என்பது கூழாமரங்காரணமாக ஏற்பட்ட ஊர்ப்பெயராகும். கூழாமரமானது பாவா, கொஞ்சி, பூவு என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. (குகதாசன் 2004: 347, பி.எஸ்.மணி 1992:299) முற்காலத்தில் வீதியோரங்களில் நிழல்தருமரங்களில் ஒன்றாக இது வளர்க்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்திலும் (கூழாவடி – வலிதென்மேற்கு, வடமராட்சி கிழக்கு). கிளிநொச்சி மாவட்டத்திலும் (கூழாவடி) இம்மரப்பெயராலமைந்த இடப்பெயர்கள்.

குமிழமரங் காரணமாக குமிழமோட்டை (நானாட்டான்), குமிழவில்லு (முசலி) என்னும் ஊர்கள் அமைந்துள்ளன. குமிழெண்ணெய் வாதநோய்களுக்குப் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (ப.சே.வா.நி. 40). அவ்விதமே குருந்தமரம் காரணமாக குருந்தங்குளம் (மாந்தை மேற்கு) என்னும் ஊர் உள்ளது. குருந்து இலங்கையின் வடபகுதியில் பரவலாகக் காணப்படும் ஒரு மரமாகும். இதில் குருந்து, மயிலடிக்குருந்து என்ற பேதங்களுண்டு. மயிலடிக்குருந்தெண்ணெய், குருந்தெண்ணெய் (ப.சே.சிர..நி. 79,110) என்பன சிரநோய்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

மகிழமரம் காரணமாக மகிழங்குளம் (நானாட்டான்) என்னும் ஊர் உள்ளது. மகிழம்பூச்சந்தனாதியெண்ணெய் என்பது பித்தரோகங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது (ப.சே.பி.நி. 149). மருதமடு (முசலி), சன்னர்வேலி மருதமடு (மாந்தை), தேற்றாவடி மருதன்குளம் (மன்னார் நகரம்), தச்சனா மருதமடு (மடு). என்பன மருமரத்துடன் தொடர்புடையவையாக உள்ளன. தேற்றாவடிமருதன்குளம் - தேற்றாமரம், மருதமரம் ஆகிய இரண்டு மரப்பெயர்களைக்கொண்டு அழைக்கப்படுகிறது. மருது, நெல்லி, அத்தி, இலந்தை போன்ற மரங்கள் உள்ள இடத்தில் நன்னீர் ஊற்று இருக்கும் என்பது நம்பிக்கை (அ. பி. சி. 1996). மன்னார் போன்ற உவர்நிலமுள்ள இடங்களில் நன்னீர் பெறுவதன்பொருட்டு இம்மரங்கள் வளர்க்கப்பட்டிருக்கலாம் பாதுகாக்கப்பட்டிருக்கலாம். தேற்றான்கொட்டை அசுத்தநீரைத் தூய்மையாக்கக் கூடியது.

கூமா உலர்வலயத்துக்குரிய ஒரு மரமாகும் (குகதாசன்:2004: 188), அம்மரப்பெயருடன் தொடர்புடைத்தாய் கூமாக்குளம் (முசலி), பெரிய கூமாக்குளம் (முசலி), சின்னக் கூமாக்குளம் (முசலி) என்னும் ஊர்ப்பெயர்கள் காணப்படுகின்றன. உடலையடி (மாந்தை). உடலம் என்பது கடல்மாங்காயைக் குறிக்கும். (ம.பெ.அ, குகதாசன்:2004:108) இது தாழ்நிலம், நீர்க்கரைகளில் வளரும் சிறிய மரம். இதன் மரப்பால் நச்சுத்தன்மையுடையது.

மாவிலங்கை மரத்தைச் சுட்டும் இடப்பெயர்களாவன -மாவிலங்கேணி (நானாட்டான்), மாவிலங்கேணி (நானாட்டான்). மாவிலங்கன் குளம் என்னும் இடம் மடு பிரதேசத்திலுள்ளது. – மாவிலங்கம் வேர்த்தைலம் (ப.சே.சி.நி..57,), சின்னமாவிலங்கமெண்ணெய் (ப.சே.ச.நி. 14,) மாவிலங்கமெண்ணெய் (ப.சே.ச.நி. 115) வாயு மாவிலங்கமெண்ணெய் (ப.சே.வா.நி. 102, 104, ப.சே.உ.நி. 139) என்பன யாழ்ப்பாண வைத்தியநூல்களில் காணப்படும் மருந்துகளாகும். முருங்கைமரத்துடன் தொடர்பன இடப்பெயர்கள் - முருங்கன் (நானாட்டான்), முருங்கன்பிட்டி (நானாட்டான்), முருங்கையடிக்குளம் (மடு). மாந்தை மேற்கில் முருங்கையடிப்பிட்டி என்றும் ஓரிடம் உள்ளது. முருங்கைவேர்க்காயம் பரராசசேகர வைத்தியத்தில் சன்னி நோய்க்குக் கூறப்பட்டுள்ள மருந்துகளில் ஒன்றாகும். (ப.சே.ச.நி.119). நாவல்மரம் காரணமாக பெரிய நாவற்குளம் (மன்னார் நகரம்), நாகதாழ்வு (மன்னார் நகரம்), சிறுநாவற்குளம் (மன்னார் நகரம்), நாகச்செட்டி (நானாட்டான்), நாகதாழ்வு (மாந்தை). ஏன்னும் ஊர்ப்பெயர்களுள. நாவல்மரமானது நாகமரம், நாகப்பழமரம், சம்பு என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. சம்புத்தீவு அல்லது ஜம்புத்தீவு என்பது பண்டைய பாரதத்தின் பெயராகும். இலங்கையின் பல பாகங்கள் நாவல் மரத்தின் பெயரால் அழைக்கப்படுகின்றன. யாழ்குடாநாட்டின் ஒரு பகுதி ஜம்புகோளப்பட்டினம் என்று அழைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது (யா.வை.வி.1928: 27). ஆல், அரசு, அத்தி, இத்தி, நாவல் ஆகிய ஐந்து மரங்களையும் சேர்த்துப் பஞ்ச துவர்ப்பிகள் என்று அழைப்பது தமிழ் மருத்துவத்தில் வழக்கம். இவ்வைந்துவகை மரப்பெயர்களிலும் மன்னார் மாவட்டத்தில் இடப்பெயர்களிருப்பது ஒரு சிறப்பம்சமாகும். நாவல் நெய், நாவலெண்ணெய், சம்பாதிச்சூரணம் (ப.சே.கெ.நி. .5, 35, 40, 41, 6,.43), ஆகிய மருந்துகள் வழக்கிலுள்ளன.

நறுவிலிமரம் காரணமாக நறுவிலிக்குளம் கிராமம் (நானாட்டான்) என்னும் ஊர் உள்ளது. நறுவிலியில் பெரிய நறுவிலி, சிறிய நறுவிலி என்ற பேதங்களுண்டு (கு.மூ). முற்காலத்தில் வடபகுதியில் பரவலாகக் காணப்பட்ட இம்மரம் தற்போது அருகிவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. யாழ்.மாவட்டத்திலும் சில இடங்கள் இத்தாவரத்தின் பெயரால் அழைக்கப்படுகின்றன. உ-ம். நறுவிலிநெய் மகளிர் நோய்களில் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது (ப.சே.கெ.நி. .23)

நொச்சிக்குளம் (மன்னார் நகரம்), நொச்சிக்குளம் (நானாட்டான்), பூநொச்சிக்குளம் (முசலி), நொச்சிக்குளம் (முசலி), பெரிய நொச்சிக்குளம் (முசலி), சின்ன நொச்சிக்குளம் (முசலி) என்பன நொச்சியுடன் சம்பந்தப்பட்ட ஊர்ப்பெயர்களாகும். நொச்சியில் கருநொச்சி, பொன்னொச்சி, நீர்நொச்சி என்ற பேதங்களுண்டு. பொதுவாகக் கருநொச்சியே அதிகம் காணப்படுகிறது. ஆயினும் முசலியில் பொன்னொச்சியுடன்(பூநொச்சி) தொடர்பாக ஊர்ப்பெயர் உள்ளமை கவனிக்கத்தக்கது. இலங்கையில் குறிப்பாக வடமாகாணத்தில் நொச்சி (கருநொச்சி) யின் பரம்பல் பரவலாக எல்லாவிடங்களிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. நிர்குண்டித்தைலம் (நிர்குண்டி – நொச்சி) (ப.சே.சிர.நி. 67, 106, 145) நொச்சியெண்ணெய் (ப.சே.ச.நி. 148) நொச்சியிலைச்சாற்றிலெண்ணெய் (ப.சே.வா.நி. .25, 108,), நொச்சிநெய் (ப.சே.உ.நி. 47). போன்ற மருந்துகள் நொச்சியின் மருத்துவப் பயன்பாட்டிற்குச் சான்றாகவுள்ளன.

பூவரச மரத்துடன் தொடர்புடைய ஊர்ப்பெயர்கள் - பூவரசங்குளம் (நானாட்டான்), பூவரசங் கண்டல் (நானாட்டான்). பூவரசன் கண்டல் - பூவரசு – கண்டல் ஆகிய இருதாவரப் பெயர்களால் அழைக்கப்படுகிறது. புளிய மரத்துடன் தொடர்பான ஊர்ப்பெயர்கள - சாம்பன் புளியங்குளம் (நானாட்டான்), களிமோட்டை புளியங்குளம் (நானாட்டான்), உடையாவடி புளியங்குளம் (நானாட்டான்), புளியடி நீராவி (முசலி), சாய்பு புளியங்குளம் (முசலி), புளியமோட்டைப்புலவு (முசலி), புளியங்குளம் (மாந்தை), மரியா புளியங்குளம் (மாந்தை), பணிக்கர் புளியங்குளம் (மடு), வைரவப்புளியங்குளம் (மடு), புளியங்குளம் (மாந்தை), வவுனியன் புளியங்குளம் (மடு). புளியெண்ணெய் (ப.சே.வா.நி..40, 90,ப.சே.பி.நி. 149, 153), புளியிலைக் குழம்பு (ப.சே.கெ.நி. 81,), முக்கூட்டுப்புளியெண்ணெய் (ப.சே.பி.நி.151), பெரிய புளியெண்ணெய் (ப.சே.உ.நி. 86), வெப்பாத்திப்புளியெண்ணெய் (ப.சே.உ.நி..88) என்பன புளி சேர்ந்த சில மருந்துகளாகும்.

புங்கமரம் காரணமான இடப்பெயர்கள் - புங்கந்தாழ்வு (மன்னார் நகரம்), புங்கந்தாழ்வு (நானாட்டான்). புங்கம்வேரெண்ணெய் (ப.சே.பா.நி.112), புங்கம்வேர்க்கொதியெண்ணெய் (ப.சே.பா.நி..117), புங்கம்பாலெண்ணெய் (ப.சே.மே.நி..85). சாளம்பை என்பது கடம்பு, நீர்க்கடம்பு, சிறுகடம்பு என்னும் வேறு பெயர்களையுடைய ஒரு மரம். அதனுடன் தொடர்பான இடப்பெயர்கள் - சாளம்பன் (மாந்தை), சாளம்பைக்குளம் (மாந்தை), பரங்கிச்சாளம்பன் (மாந்தை), சாளம்பன் (நானாட்டான்). மடுப்பிரதேசத்தில் சாளம்பைக்குளம் என்னும் இடமும் உள்ளது. செம்மணத்தி மரத்துடன் தொடர்பாக செம்மணத்தியன்குளம் (மடு) என்னும் ஊர்ப்பெயருள்ளது. செம்மணத்திமரம் தேவதாரம், செம்புளிச்சை என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. (வை.ம.அ.). வடபகுதியில் உலர்வலயக்காடுகளில் இம்மரம் காணப்படுகிறது. இம்மரத்தின் புகைக்கு யானைகள் கிட்டநெருங்க மாட்டா என்ற நம்பிக்கையுள்ளது. சிலர் இதனைக் காட்டுச்சந்தனம் என்பர் (ம.பெ.அ. 1986 : 380) செம்மணத்தித்தைலம் சிர.நோய்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. ப.சே.சிர.நி.104)

தாண்டிக்குளம் (முசலி) என்பது தான்றி மரத்துடன் தொடர்பாக ஏற்பட்ட இடப்பெயராகும். தான்றி என்பது தாண்டியாகத் திரிபடைந்திருத்தல் வேண்டும். வடமாகாணத்தில் தான்றிமரத்தைப் பரவலாகக் காணக்கூடியதாகவுள்ளது. தமிழ் மருத்துவத்தில் கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் ஆகிய மூன்றையும் சேர்த்துத் திரிபலை என்று அழைப்பர். வாத, பித்த, கபப்பிணிகளுக்கு இது நல் மருந்தாகும். பலாசமரம் - இதன் வேறு பெயர்களாகப் பலாசு, புரசு, முருக்கன் என்பன கூறப்பட்டுள்ளன (கு.மு: பக்.509) பரசங்குளம் (மடு). புரசு – பரசு -பரசன்குளமாகத் திரிபடைந்திருக்கலாம். தணக்கு மரத்துடன் தொடர்பான இடப்பெயர்கள் - சின்னத் தணக்கன்குளம் (முசலி), பெரிய தணக்கன்குளம் (முசலி)

தேற்றா மரத்துடன் தொடர்பான ஊர்ப்பெயர்கள் - வேறுபெயர் - தேத்தான் தேத்தாவடி மருதன்குளம் (மன்னார் நகரம்), தேத்தாக்குளம் (நானாட்டான்) தேற்றாமரத்தின் வேறு பெயர் தேத்தாவாகும்.

> **“தண்ணீருஞ் சேறுந்தான் வேறு செய்தவள்**
> **பண்ணியவுடல் நீர்பருக முறித்தவள்**
> **புண்ணிய சத்தி பெருங்கப நாசினி**
> **தேண்ணிய தேற்றா மரத்தின் பெயரே”**

என்று தேற்றாமரத்தின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது சட்டமுனிநிகண்டு . அதாவது சேறு,சகதியுள்ள நீரில் தேற்றாங்கொட்டையைப் போட்டால் அது அந்த நீரைத் தெளியப்பண்ணிச் சுத்தமாக்கிவிடும். முற்காலத்தில் நீரைச் சுத்தப்படுத்தத் தேற்றாங்கொட்டையைப் பயன்படுத்தியுள்ளதுடன் (இந்து

பதார்த்தசாரம்:1888: 157) நீர்நிலைகளுக்கு அருகாமையிலும் இம்மரத்தை வளர்த்துப் பாதுகாத்துள்ளனர். தேற்றா எண்ணெய் (ப.சே.சி.நி.77, ப.சே.மே.நி.47), தேற்றாம்பழத்தடை (ப.சே.சி.நி. 205)

வேங்கைமரம் - வேறுபெயர் திமில், திமிசு, அசனம் என்பனவாகும். (வை.மூ.அ: கு.மூ.) "திமிசுந் திமிலுங் கணியும் வேங்கை "என்கிறது சேந்தன்றிவாகரம் நிகண்டு (பக்.60) திமிலைக்குளம் (மாந்தை) வேங்கை காரணமாக ஏற்பட்ட இடப்பெராக இருத்தல் கூடும். அசனாமிலகத்தைலம், அசனவில்வாதித்தைலம்

(ப.சே.சி.நி..84,.175,206). உவாய் என்பது உலர்வலயத்திலும், வரண்ட காடுகளிலும், கடற்கரையோரங்களிலும் வளரும் ஒரு மரமாகும். ஆம்மரத்துடன் தொடர்பாக உவாயடிப்பண்ணை (மன்னார் நகரம்) என்னும் ஊர் காணப்படுகிறது. அவ்விதமே, உயிலமரம் காரணமாக உயிலங்குளம் (மன்னார் நகரம்) என்னும் ஊர்ப்பெயரும் உள்ளது.

வேப்பங்குளம் (மடு), வேப்பங்குளம் (முசலி), வேப்பங்குளம் (மாந்தை) என்பன வேப்பமரம் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்களாகும். வேம்பின் வேறுபெயர்களில் நிம்பம் என்பதும் ஒன்றாகும் (கு.மூ.பக்.665) கரைவெட்டி வேம்பு என்னும் இடம் மாந்தை மேற்கில் உள்ளது. நிம்பாதித்தைலம் (ப.சே.சிர.நி..47, 81, 88,58,70), இலசுனநிம்பாதித்தைலம் (ப.சே.சிர.நி. 120) வேப்பிலைக்காயம் (ப.சே.கெ.நி..24,), வேப்பம்பட்டைக்குடிநீர் (ப.சே.கெ.நி..72) திரிவர்க்கநிம்பாதி யெண்ணெய் (ப.சே. வா.நி..20), நிம்பாதிச்சூரணம் (ப.சே.வா.நி 35), வேப்பிலைக்காயம் (ப.சே.வா.நி79).

விடத்தல்தீவு (மாந்தை) என்பது விடத்தல்மரங்கள் மிகுதியாக உள்ள காரணத்தால் ஏற்பட்ட இடப்பெயராக இது அமைந்துள்ளது. பெண்ணோய்களுக்கு (மாதவிடாயின்போது ஏற்படும் அதிகக் குருதிப்போக்கு) விடத்தல் இலை பயன்படுத்தப்படுகிறது. விளாமரம் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்களாவன - விளாத்திக்குளம் (முசலி), பெரிய விளாங்குழி (மாந்தை), சிறுவிளாங்குழி (மாந்தை), விளாத்திக்குளம் (மாந்தை), விளாத்திக்குளம் (மடு), விளாத்திக்குளம் (மடு), விளாத்திக்குளம் (மடு)

மாந்தை / மாதோட்டம் (மாந்தை). மா என்பதற்குப் பல அர்த்தங்களுண்டு. மாமரம் நிறைந்த மாஞ்சோலையாக இருந்தமையாலும் மாதோட்டம் என்ற பெயர் ஏற்பட்டிருத்தல் சாத்தியமே. "மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரில்" என்று சுந்தரமூர்த்தி நாயனாரும் (திருக்கேதீச்சர நாதர் திருப்பதிகம் 2010: பக்.27), "மாவும், பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர்" என்று திருஞானசம்பந்தரும் (திருக்கேதீச்சர நாதர் திருப்பதிகம் 2010: பக்.20) பாடியிருத்தல் காண்க.

செம்மாங்காய்

செம்மாங்காய் என்பது களாவைக்குறிக்கும். (வை.ம.அ) செம்மாந்தீவு (நானாட்டான்) சிலர் இதைச்செம்மண்தீவு எனறுங்கூறுவர். பனிச்சை- பனிச்சைக்குளம் (மடு) பனிச்சைமரம் வடமாகாணத்தில் முற்காலத்தில் அதிகளவில் காணப்பட்டுள்ளது. தற்காலத்தில் அங்கொன்று, இங்கொன்றாகக் காணப்படுகிறது. வயிற்றோட்டம், வயிற்றுக்கடுப்பு என்பவற்றுக்குப் பயன்படும் பனிச்சம்பழநெய் இதிலிருந்து தயாரிக்கப்படுகிறது.(ப.சே. .பா.நி). முதிரை – முதிரைப்பரி ஆலங்குளம் (முசலி). பாலை –பாலையடி புதுக்குளம் (மாந்தை மேற்கு), பாலைக்குழி (முசலி), பாலையடிச் சிறுகுளம் (முசலி), பாலைக்குழி (நானாட்டான்), பாலையடிக்குளம் (மடு) என்பன பாலை மரங்காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்களாகும்.

மன்னார் மாவட்டத்தில் கொடிப் பெயர்களில் அழைக்கப்படும் இடப்பெயர்கள்

செட்டியர்மகன் கட்டையடம்பன் (நானாட்டான்), மல்லையருத்தன் அல்லது (மல்லவராயன்) கட்டையடம்பன் (நானாட்டான்), அடம்பன் (மாந்தை), அடம்பன் தாழ்வு (மாந்தை), மழவராயர் கட்டையடம்பன் (மடு) ஆகிய இடப்பெயர்கள் அடம்பன் கொடி காரணமாகவும், அல்லைப்பிட்டி (மன்னார் நகரம்) அல்லைக் கொடி காரணமாகவும், (யாழ்ப்பாண மாவட்டத்திலும் அல்லைப்பிட்டி என்ற இடம் உள்ளது.) கொவ்வங்குளம் (கொல்லன்குளம்) (நானாட்டான்) கொவ்வைக்கொடி காரணமாகவும், குண்டுமணிக்குளம் (மடு) குன்றிமணிக்கொடி காரணமாகவும், குறிஞ்சாக்குளம் (மாந்தை), குறிஞ்சாக்கொடி காரணமாகவும், (குறிஞ்சா சேர் மருந்து - குறிஞ்சாகம் (ப.சே.சி.நி 179, குறிஞ்சிப்பாகு (ப.சே.சி.நி 179), மல்லிகைநாட்டி (நானாட்டான்), மல்லிகைக் கொடி காரணமாகவும் (மல்லிகை சேர் மருந்து - கொடிமல்லிகையெண்ணெய் (ப.சே. பா.நி.112), கிங்கிணியார் குளம் (முசலி) என்பது காக்கணங் கொடி காரணமாகவும் ஏற்பட்டஇடப்பெயர்களாகும். காக்கணம் என்பதன் வேறுபெயர் கிகிணியாகும் (வை.மூ.அ பக்.99) கிகிணி என்பது கிங்கிணியாகியிருத்தல் தகும். “கன்னி கிகிணி கருவிளை காக்கணம்” – சேந்தன்றிவாகர நிகண்டு . (பக்.71).

தாமரைக்குளம் (மாந்தை) ஒலுக்குளம் (மாந்தை மேற்கு) என்பன தாமரை காரணமாக ஏற்பட்ட பெயர்களாகும். ஒலு என்ற சிங்களப்பெயருக்குத் தாமரை என்றும் பொருள். குளம் என்பது தமிழ்ச் சொல். தாமரை சேர் மருந்துகளாவன - தாமரைவளைய ஏலாதிக்குளிகை (ப.சே. பா.நி141), தாமரைவளையநெய் (ப.சே. பி.நி). வஞ்சியன்குளம் (நானாட்டான்) என்பது வஞ்சிக் கொடி காரணமாகவும், பறங்கிக்கமம் (மாந்தை), பறங்கிக்கமம் (மாந்தை), பறங்கி சாளம்பன் (மாந்தை), பறங்கிக்குளம் (மடு) என்பன பூசணிக் கொடி காரணமாகவும் ஏற்பட்டிருக்க வாய்ப்புகளுள. பறங்கி என்பதற்குப் பறங்கிப்பூசணி (க.த.அ. பக்.654, கு.மூ.பக்512) பறங்கிக்கிழங்கு, பறங்கியர் என்ற பொருட்கள் கொள்ளத்தக்கன.

அல்லிகண்டல் (மன்னார் நகரம்) அல்லிக் கொடி மற்றும் கண்டல் மரம் காரணமாகவும், முல்லைப்பரம்பிட்டி (நானாட்டான்) முல்லைக் கொடி காரணமாகவும் ஏற்பட்ட இடப்பெயர்களாயிருத்தல் தகும்.

மன்னார் மாவட்டத்திலுள்ள செடிகள், பூண்டுகள் என்பவற்றுடன் தொடர்பான இடப்பெயர்கள்

ஈச்சை காரணமாக - ஈச்சை அளவக்கை (மாந்தை) இவ்வூர் ஈச்சை – அளவக்கை என்னும் இரு தாவரப்பெயர்களைக் கொண்டுள்ளது. அலவக்கை என்பது கீழ்க்காய்நெல்லியைக் குறிக்கும் (வை.ம..அ). எட்செடி காரணமாக - எள்ளுப்பிட்டி (மன்னார் நகரம்) என்னும் ஊர்ப்பெயரும் (எள்ளு சேர் மருந்து - எள்ளுப்பாகு ((ப.சே.கெ.நி), எருக்கு காரணமாக எருக்கலம்பிட்டி (மன்னார் நகரம்) ஊர்ப் பெயரும் வழங்கப்படுகின்றன. எருக்கின் வேறுபெயர் அர்க்கம் ஆகும் (கு.மூ.பக்.117). சேந்தன்றிவாகரமும்,” அருக்கமெருக்கே” என்று கூறுகிறது(பக்.61) எருக்கு சேர் மருந்துகள் - எருக்கலம் பூ எண்ணெய் (ப.சே. சிர.நி 261), எருக்கலம்வேர்த்தைலம் (ப.சே. ச.நி 123), அர்க்கமெண்ணெய் (ப.சே.ச.நி18), எருக்கலம்பாற்றைலம் (ப.சே.உ.நி110)

இசங்கு அல்லது இயங்கன் செடி காரணமாக இசங்கன் குளம் (மாந்தை) (இசங்கு சேர் மருந்து - இயங்கமெண்ணெய் (ப.சே.சிர.நி31), இயங்கம்வேர்க்கொதியெண்ணெய் (ப.சே.மே.நி98), கள்ளிச் செடி காரணமாக - கள்ளிக்கட்டைக்காடு (மன்னார் நகரம்), கள்ளியடி (மாந்தை), கள்ளியடிப்பிட்டி (நானாட்டான்), கள்ளிக்குளம் (மாந்தை), கள்ளி அடைஞ்சான் (மாந்தை), கள்ளிக்குளம் (மடு), கஞ்சன் கள்ளி (மன்னார் நகரம்) ஆகிய ஊர்ப்பெயர்களும் (கள்ளி சேர் மருந்துகள் -

நானாங்கள்ளியெண்ணெய் (ப.சே.சிர.நி.54), இலைக்கள்ளிக்குளிகை (ப.சே.ச.நி119), இலைக்கள்ளியெண்ணெய் (ப.சே.வா.நி 73), (ப.சே.உ.நி35), சதுரக்கள்ளித்தைலம் (ப.சே.மே.நி171), கரம்பை – அல்லது சிறுகளா(தமிழ் லெக்சிக்கன் பாகம் - 2, பக் 744, சா.சி.பி.அ. பாகம் - 2, பக். 1126) காரணமாக கரம்பைக்குளம் (மாந்தை), கரம்பைக்குளம் (மடு), கரம்பைக்குளம் (மடு), கரம்பைக்குளம் (மடு), சீதையர் கரம்பை (நானாட்டான்) ஆகிய இடப்பெயர்களும், கரிசலாங்கண்ணி காரணமாக பெரியகரிசல் (மன்னார் நகரம்), சின்னக்கரிசல் (மன்னார் நகரம்) என்னும் இடப்பெயர்களும், ஏற்பட்டிருத்தல் வேண்டும். கரிசல் அல்லது கரிசாலை என்பது கையான்தகரையைக்குறிக்கும் (கு.மூ.பக்181) (கையாந்தகரை சேர் மருந்துகள் - கையாந்தகரை யெண்ணெய் (ப.சே.சிர.நி41), கையாந்தகரைக்குழம்பு (ப.சே.சிர.நி177), கரிசாலையெண்ணெய் (ப.சே. உ.நி 158)

கற்றாழை காரணமாக ஏற்பட்ட இடப்பெயர் கத்தாளம்பிட்டியாகும். (மாந்தை). குமரி, கற்றாளை என்பன சோற்றுக்கற்றாளையைக் குறிக்கும். கல்+ தாழை =கற்றாழை. அதாவது ஆதியில் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து (அக்கல்லில்) முன்தோன்றிய தாவரங்களில் கற்றாழையும் ஒன்றாகும். குமரி என்றழைக்கப்படும் கற்றாழை காரணமாகவே பண்டைத்தமிழ்ப்பிரதேசத்துக்குக் குமரிக்கண்டம் என்று பெயர் ஏற்பட்டதாக அறிஞர் சிலர் கருதுகின்றனர் (இராமநாதன் 2008: 15). மன்னார் மாவட்டத்தில் அபூர்வமான கற்றாழைவகைகள் உ-ம் செங்கற்றாளை.காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (கற்றாழை சேர் மருந்துகள் - குமரித்தைலம் (ப.சே.சிர.நி10), குமரிபற்பம் (ப.சே.உ.நி118, 119), குமரியெண்ணெய் (ப.சே. பி.நி 151), குமரிவேர்த்தைலம் (ப.சே.சிா.நி 13)

மருதோன்றி காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்களாக மருதோன்றிக்குடா (முசலி), மருதோனித்தேவன் வேலகுளம் (மாந்தை) என்பன காணப்படுகின்றன. மருதோண்டித்தேவன் வேலகுளம் என்பதில் மருதோன்றி – வேல் ஆகிய இருதாவரப் பெயர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. அந்தோனிமெலிஞ்சிக்குளம் (முசலி) என்பது மெலிஞ்சிப்பூடு காரணமாக ஏற்பட்டிருக்கலாம். மெலிஞ்சி உலர்வலயத்துக்குரி ஒரு பூண்டு. அலவக்கைச்சிறு குளம் (முசலி), ஈச்சு அலவக்கை (மாந்தை), அலவக்கை வெட்டுக்காடு (நானாட்டான்), அலவக்கை நானாட்டான்) என்னும் இடங்கள் கீழ்காய்நெல்லி காரணமாக ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. அலக்கைச்சுரம் என்பது கீழ்க்காய் நெல்லியின் மறு பெயர்களில் ஒன்றாகும் (வை.ம.அ). அலக்கை என்பது அலவக்கையாகத் திரிபடைந்திருத்தல் கூடும்.

சுண்டிக்குழி (நானாட்டான) தொட்டாற்சுருங்கி காரணமாக ஏற்பட்டதாகக் கருத இடமுண்டு. சுண்டி என்பது தொட்டாற்சுருங்கியைக் குறிக்கும் (வை.ம.அ.). கொக்கமடு (முசலி), கொக்குப்படையன் (முசலி), கொக்குமடு (நானாட்டான்) என்னும் இடப்பெயர்டகளுக்கும் கொக்காம்பாளைக்கும் தொடர்புகள் உள. கொக்காம்பாளை ஒரு செடி (கழக த.அ.பக்389) கொக்கம் என்பதற்கு கொக்காம்பாளை, மாமரம் என்றும் பொருளுண்டு. (வை.ம.அ). முள்ளித்திடல் (மன்னார் நகரம்), முள்ளிப்பள்ளம் (மன்னார் நகரம்), முள்ளி மோட்டை (நானாட்டான்), முள்ளி வேலி (நானாட்டான்), முள்ளிக்குளம் (முசலி), முள்ளிக்குளம் (மடு), முள்ளி கண்டல் (முசலி) என்பன முள்ளிச் செடியுடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. முள்ளி கண்டல் - முள்ளி, கண்டல் ஆகிய இரு தாவரப் பெயர்களைக் கொண்டுள்ளது. முள்ளியில் நீர்முள்ளி, கடல்முள்ளி என்ற வகைகள் உண்டு. மன்னார் கடலை அண்டிக்காணப்படும் இடமாதலால் இங்கு பெரும்பாலும் கடல்முள்ளியே அதிகம் காணப்படுகிறது. முசலி (முசலி) என்னும் ஊர்ப்பெயர் நிலப்பனங்கிழங்கு என்னுஞ் செடி காரணமாக ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. நிலப்பனங்கிழங்கின் வேறுபெயர்கள் முசலிகந்தம், முசலீமூலம் (கு.மூ.) என்பனவாகும்.

பருத்திப்பண்ணை (மன்னார் நகரம்) பருத்திச் செடி காரணமாகவும், (பருத்தி சேர் மருந்து - பருத்திக்குழம்பு (ப.சே.கெ.நி. 41), பருத்தியிலைச்சாற்றிற் புளியெண்ணெய் ப.சே.உ.நி.. 87), தாழையன் குளம் (மடு) தாழை காரணமாகவும் (தாழை சேர் மருந்து - தாழைவிழுதுநெய் ப.சே.பா.நி. 181),

துவரங்கேணி (மன்னார் நகரம்), துவரையடிவன் (நானாட்டான்), உமையார் துவரன்குளம் (மடு) துவரைச் செடி காரணமாகவும் ஏற்பட்ட இடப்பெயர்களாம்.

அடுத்து மன்னார் மாவட்டத்திலுள்ள புற்பெயர்களுடன் தொடர்பாக அழைக்கப்படும் ஊர்ப்பெயர்களைப் பார்ப்போம்.

கோரை, மூங்கில் என்பன புல்வகைக்குரியன. இவற்றின் பெயர்களில் முறையே கோரை மோட்டை (மன்னார் நகரம்), கோரை மோட்டை (நானாட்டான்) மூங்கில் முறிச்சான் (மாந்தை) என்னும் இடப்பெயர்கள் அமைந்துள்ளன.

முடிவுரை

மன்னார் மாவட்டத்திலுள்ள தாவர இடப்பெயர்கள் பெரும்பாலும் மரப் பெயர்களாக அமைவது கவனிக்கத்தக்கது. அதற்குக் காரணம் மரங்கள் பல்லாண்டு வாழ்பவையாகவும் தனித்தோ அன்றிக் கூட்டமாகவோ இருந்தாலும் ஓரிடத்தை இலகுவில் அடையாளப்படுத்திச் சுட்டிக்காட்டத்தக்கனவாகவும் இருத்தலுமாகும். செடி, கொடிகள் பெரும்பாலும் அவற்றின் மிகுதி காரணமாகவே ஓரிடத்தின் பெயராக அமைகின்றன. புல் பூண்டுகளும் அவற்றின் மிகுதி அல்லது பயிர்ச் செய்கை காரணமாக இடப் பெயராக அழைக்கப்படுகின்றன.

மன்னார் மாவட்டமானது கடலோர எல்லையைக் கொண்டுள்ளதால் அங்கு கண்டல், அடம்பு, கடல் மாங்காய், கடல்முள்ளி, தாழை போன்ற இயற்கைத் தாவரங்களும், வரணிலைத்தாவரங்களான இலந்தை, இலவு, குமிழ், குருந்து, கூமா, புளி, தணக்கு, உவாய், விடத்தல், அல்லைக்கொடி, குன்றிமணி, குறிஞ்சா, ஈச்சை, எருக்கு, கள்ளி, கருங்காலி, கரம்பை, மருதோன்றி, மெலிஞ்சி, தொட்டால்வாடி, கற்றாழை, பன்னை, ஆவாரை போன்ற தாவரங்களும் மற்றும் எல்லாச் சூழலிலும் வளரக்கூடிய ஆல், அரசு. நாவல், வாழை, வேம்பு, தேற்றா, கொன்றை மாவிலங்கை, நறுவிலி, மருது, மகிழ், இலுப்பை போன்ற தாவரங்களும் மிகுந்திருப்பதை இம்மாவட்டத்திலுள்ள இடப்பெயர்கள் மூலமும் அறிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது. இத்தாவரங்கள் யாவுமே தமிழ் மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் மூலிகைகளாக உள்ளன. இலங்கையில், வெளிவந்ததும், புராதனமானதும், மிகப்பெரியதுமான சித்தவைத்திய நூலான பரராசசேகரவைத்திய நூலின் உதவியுடன் இம்மூலிகைகளின் மருத்துவப்பயன்பாடுபற்றி ஆங்காங்கே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதன்| மூலம் பரராசசேகர வைத்தியநூலானது எமது பிரதேசத்திலுள்ள தாவர மூலிகைகளை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது என்பதும் உறுதிப்படுத்தப்படுகிறது. இம்மாவட்டத்திலுள்ள 587 ஊர்ப்பெயர்களில் ஏறத்தாழ அரைவாசி இடப்பெயர்கள் மூலிகைத் தாவரப்பெயர்களால் அழைக்கப்படுவதன் மூலம் இம்மாவட்டத்தின் மூலிகைத் தாவரங்களின் செறிவையும் விளங்கிக்கொள்ள முடியும். இம்மாவட்டத்திலுள்ள மருத்துவ மூலிகைகளைப் பற்றி விரிவான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் இவ்விடப்பெயராய்வு தூண்டுகோலாக அமையும் என்பது கட்டுரையாசிரியரின் நம்பிக்கையாகும்.

உசாத்துணை நூல்கள்

1. கதிர்.தணிகாசலம் தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும் - சரவணா பதிப்பகம், சென்னை, 1992. பு.180
2. ஞானப்பிரகாசர். சுவாமி. – யாழ்ப்பாண வைபவ விமர்சனம் (யா.வை.வி) (1928) New Delhi: Chennai, Asia Educational Services (2003)
3. குமாரசுவாமி. எஸ்.டபிள்யூ. வடமாகாணத்துச் சில ஊர்ப்பெயர்கள் - யாழ்ப்பாணம், 1918 (யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற நூலின் பின்னிணைப்பாக இது உள்ளது) பக்.60,61
4. Kularatnam.K – Tamil Place Names in Ceylon outside the Northern and Eastern Provinces; Proceeding of the first International Conference Seminar of Tamil Studies,Vol.I, Kula Lumpur,Malasiya
5. பாலசுந்தரம்.இ - ஈழத்து இடப்பெயர் ஆய்வு– ரொறன்ரோ, கனடா. 2002
6. பகவதி கு. ஊர்ப்பெயர்கள் ஒரு வரலாற்று மூலம் - முல்லை நிலையம், சென்னை. 2005. பக்.11, 12
7. கௌமாரீஸ்வரி எஸ். (பதிப்பாசிரியர்) நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ் மொழி அகராதி (த.மொ.அ.) – சாரதா பதிப்பகம், சென்னை, 2016
8. முருகேசமுதலியார் க.ச - குணபாடம் மூலிகைவகுப்பு (கு.மூ.)–தமிழ்நாடு சித்தமருத்துவ வாரியம், சென்னை. 1988 பக்.495
9. வைத்திய மலையகராதி (வை.ம.அ) – பூமகள் அச்சுக்கூடம், சென்னை. 1903
10. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) – பரராசசேகரம் வாதரோகநிதானம் (ப.சே.வா.நி), மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை,1934
11. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) –பரராசசேகரம் சிரோரோகநிதானம் (ப.சே.சி.நி), சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்,1928
12. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) – பரராசசேகரம் கெர்ப்பரோக நிதானம் (ப.சே.கெ.நி), ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை,1932
13. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) – பரராசசேகரம் பாலரோகநிதானம் (ப.சே.பா.நி), ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை,1932
14. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) – பரராசசேகரம் உதரரோகநிதானம் (ப.சே.உ.நி), மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை,1935
15. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) – பரராசசேகரம் பித்தரோகநிதானம் (ப.சே.பி.நி), மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை,1934
16. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) – பரராசசேகரம் சிலேற்பனரோகநிதானம் (ப.சே.சிலே.நி), மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை,1934
17. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) – பரராசசேகரம் மேகரோகநிதானம் (ப.சே.மே.நி), மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை,1935
18. பொன்னையா.ஐ (பதிப்பாசிரியர்) – பரராசசேகரம் சன்னிரோகநிதானம் (ப.சே.ச.நி), மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை,1932
19. குகதாசன் மு.ளு. தாவரவியல் மற்றும் பொதுவான சிறப்பியல்புகளுள்ள சில தாவரங்களின் நிரல்- சிறுகுறிப்புகளுடன் - Field work Centre – Thondaimannaru Bulletin No.16 2004.
20. சேந்தன்றிவாகரம் பதிப்பு 1897.
21. கழகத் தமிழ் அகராதி (க.த.அ.)– திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1980 ப.250.

22. அருள் திருநாவுக்கரசு (பதிப்பாசிரிர்) - திருக்கேதீச்சர நாதர் தேவாரத் திருப்பதிகம். செப்டெம்பர், 2010.
23. சாமி.பி.டி - இலக்கியத்தில் செடி,கொடிகள்.
24. சப்மன் தனெல்.வி. (மொழிபெயர்ப்பு) - இந்துபதார்த்த சாரம் - Strong and Asbury Printers, 1888.
25. கந்தசாமி முதலியார் - வைத்திய மூலிகை அகராதி (வை.மூ.அ.)– பி.இரத்தி நாயக்கர் அண்ட் சன்ஸ், சென்னை.
26. மாதையன், சித்திரபுத்திரன் - மர இனப் பெயர்த் தொகுதி. (ம.பெ.அ.) தொகுதி– 1, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986.
27. மணி பி.எஸ். – வளம் தரும் மரங்கள் (இரண்டாம் பாகம்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட். சென்னை 600 098,1989.
28. மணி பி.எஸ்.– வளம் தரும் மரங்கள் (4ஆம் பாகம்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட். சென்னை 600 098, 1992.
29. சாம்பசிவம்பிள்ளை அகராதி (சா.சி.அ.) – பாகம் -2,
30. தமிழ் லெக்சிக்கன் - பாகம் -2 சென்னைப் பல்கலைக்கழகம்.
31. சிங்காரவேலு முதலியார்.ஆ. – அபிதான சிந்தாமணி (அ.பி.சி.), AsianEducational Services, New Delhi, Chennai, 1996.